## சிந்தனைக்கு முன்

படைப்பினங்கள் அனைத்தையும்விட மிக உயர்ந்தவன், பலம், வீரம், தோற்றம், போன்றவற்றில் இவனையும் விஞ்சிய பல இனங்கள் இருப்பினும், இவனே மிகச் சிறந்தவன். காரணம் இவன் பெற்றிருக்கும் சிந்திக்கும் ஆற்றல்தான்.

ஆனால், தனக்கு வழங்கப்பட்டுள்ள பகுத்தறிவை வைத்துக் கொண்டே மனிதன் வழிதவறிச்செல்கிறான். மனிதனைத் தலை நிமிர்ந்து நிற்கச் செய்யும் பகுத்தறிவே தரம் தாழ்ந்து நிற்பதற்கு சில நேரங்களில் காரணமாகிறது. மனிதனாகப் பிறந்தவன் சிந்திக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ‘சிந்தனை செய் மனமே!‘ எனும் நூலின் வாயிலாக உங்களைச் சந்திக்க வருகிறேன்.

இந்நூல் வெளிவரக் காரணமாக இருந்த அனைவருக்கும், இதை வாசித்துக் கொண்டிருக்கும் உங்களுக்கும் நன்றிகள் பல!

அன்புடன்

இளையவைகை

சிந்தனைசெய் மனமே!

குறைவற்ற செல்வமே நில்!

கொஞ்சம் நில்!

வாழ்க்கைப் படிகளில் விரையாதே, நில்!!

சற்று மெதுவாகச் செல்!

எதுவாயினும் சரியே, உனக்கு நலனளிக்கும் செயல்களில் விரைந்திடு! நலன் இல்லையேல் விரலையும் அசைக்காதே!

அளவு கடந்த அழகைச் சுமந்துள்ள இவ்வுலகில் ஏதோ பிறந்து விட்டோம். சில நாட்களே இங்கு வாழப் போகிறோம். இறந்தபின் மீண்டும் இங்கு வருவதோ, இங்கேயே இன்பங்களை அடையப் போவதோ இல்லை. எனவே தீயதோ, நல்லதோ அனைத்தையும் அடைந்துவிட்ட அமரர்கள் வரிசையில் அமரவேண்டுமென எண்ணுகிறாயா? அல்லது நமக்கு நாமே தலைவன். நாம் நினைத்ததே சட்டம் எதையும் ஏன் எதற்கெனக் கேட்பார் யாரிருக்கிறார்? எதையும் எங்கும் எப்படியும் செய்யலாம். நமக்கு அழிவே இல்லையென எண்ணியுள்ளாயா?

உனக்காக

மனிதா! நன்கு சிந்தனை செய்

பிறப்பையும் இறப்பையும் உன்னால் மறுக்க முடியுமா?

அல்லது, வாழ்ந்து கொண்டிருக்கும் வாழ்வைத்தான் உன்னால் மறுக்கமுடியுமா?

நீ யார்...?

மனிதனா...?

ஓ! உன் இனம் மனித இனமா?

நீ இங்கே எப்படித் தோன்றினாய்?

இதற்கு முன் நீ எங்கிருந்தாய்?

நீ இங்கு தோன்றிய நோக்கமென்ன?

இனி நீ செல்ல வேண்டிய இடம் எது?

அங்கு உன் நிலை எப்படி இருக்கும்?

என்பது போன்ற சில வினாக்களை உன் இதயம் எழுப்பவில்லையா?

எழுப்பும்! எழுப்பும்!! சில நேரங்களில் எழுப்பும்!!!

ஆனால், விடைதான் உனக்குக் கிடைப்பதில்லை போலும்...

விடை கிடைக்க வேண்டுமெனில் வீட்டிலொரு மூலையைத் தேர்ந் தெடு! விடை பெறுவாய்! வெற்றியடைவாய்!

நீ காணும் உலகமென்ன?

உன் கண்களையும் மனதையும் மகிழச் செய்யும் பொருட்களை எண்ணிப்பார்?

தலையை உயர்த்து! வானத்தைப் பார்!

அதில் ஏதாவது பிளவைக் காண்கிறாயா?

அது எவ்வாறு உயர்த்தப்பட்டுள்ளது?

அப்படியே பார்வையை கீழ்நோக்கு!

எவ்வளவு பொருட்களைச் சுமந்து கொண்டுள்ளது, பூமி!

அது எங்ஙனம் விரிக்கப் பட்டுள்ளது,

உனக்கு முன்னே பார்!

ஆம்! ஆங்காங்கே நெட்டை குட்டையாக மலைகள் உள்ளன.

அவை எவ்வாறு பிடிப்பாக நடப்பட்டுள்ளன? இவை யாவும் எங்ஙனம் என, உன் சிந்தனைக்கு எட்டவில்லை போலும்!

சிந்திப்பாய் சிறப்படைவாய்!

உலகிற்கே ஒளிதரும் சூரியனும், சந்திரனும் ஒன்றையொன்று

நெருங்கிக் கொள்ளவில்லை, நூலளவும் தடம் மாறாமல் அவை

தம் வரையறைக்குள்ளே சீராகச் சென்று கொண்டிருக்கின்றனவே! அவற்றின் ஒத்துழைப்பின்றி மரம், செடி, கொடி போன்ற தாவரங்கள் யாவும் வளராதென்பதை நீ அறிவாய்! சில காலங்கள் அவை

மறைக்கப்பட்டு விட்டால் உலகிலுள்ளவற்றில் அதிகமானவை அழிவைத் தேடிக் கொள்ளும் என்பதையும் நீ அறிவாய்! அவற்றுக்குப் பதிலாக அவை போன்று கொண்டுவரும் சக்தி உனக்கு இல்லை என்பதையும் நீ அறிவாய்!

பழ வகைகளையும் காய் வகைகளையும், இன்னும் மலர்

வகைகளையும் அள்ளித் தரும் தாவரங்களெல்லாம் என்ன?

இவ்வளவு அற்புதமானவை எங்ஙனம் தோன்றியிருக்கும்

என்பதைச் சிந்தித்தாயா?

இவையனைத்தும் முற்றிலும் அழிந்தொழிந்துவிடின் அவற்றை உருவாக்கும் திறன் உனக்குண்டா?

சிந்திப்பாய்!

உனக்கு மிகவும் அத்தியாவசியமானது நீர்!

ஆம். நீ பருகும் தண்ணீர்!

அது இல்லாமல் உன்னால் குறைந்தது பத்து நாட்கள் உயிர்

வாழ முடியுமா?

அது இல்லையாயின் நீ மட்டுமல்ல உனக்கென உள்ளவற்றில் எதுவுமே இருக்காதே!

உன்னைத் தனியறையொன்றில் அடைத்துவிட்டு, காற்றைத் தவிர வேறெதுவும் கிடைக்காமல் ஆக்கிவிட்டு, சிலநாட்கள் உன்னை மரணத்தோடு போராடவிட்டு, குறைந்தது ஒரு குவளைத் தண்ணீர் மட்டுமிருப்பின் உன் உயிர் பிழைக்குமென்ற நிலையில் ஒரு குவளைத் தண்ணீரும் உலகின் உயரிய பல செல்வங்களும் உன் முன் கொண்டு வரப்பட்டு, "இவ்விரண்டில் ஏதாவது ஒன்று மட்டுமே கொடுக்கப்படுவாய்! எது தேவை என வினவினால் எதைத் தேர்ந்தெடுப்பாய்?

செல்வங்களைத் தானே?

ஓ... தண்ணீரையா!

ஆக, ஒரு குவளை தண்ணீரின் விலையை யாரும் நிர்ணயம் செய்யவே முடியாது. அவ்வளவு பெரும் மதிப்புள்ள செல்வம் தான் தண்ணீர்

ஏற்றுக் கொண்டாயல்லவா? அது எங்ஙனம் தோன்றியிருக்கும்

என்பதை சிந்தித்ததுண்டா? சிந்திப்பின் சிதையமாட்டாய்!

காற்று!

நீ சுவாசிக்கின்றாயே, அக்காற்று!

நீ உயிர் வாழத் துணையாக்கப்பட்டுள்ளதே, அக்காற்று!

அதை ஐந்து நிமிடங்களுக்கு மட்டும் நிறுத்திவிட்டால்

என்னதான் செய்வாய்?

பதில் கூறு! ஏன் அமைதிக்குத் துணைபோகிறாய்?

முற்றிலும் காற்று செல்லாத அறையொன்றை அமைத்து அதில்

உன்னை அடைத்து, "கவலையற்றிரு மகனே!" என்று கூறினால், என் சொத்துக்கள் அனைத்தையும் கொடுத்து விடுகிறேன் என் மனைவி, மக்களனைவரையும் அடிமையாக்கி நானும் அடிமையாகி ஆம் விடுகிறேன் என்னை இவ்வறையிலிருந்து வெளியேற்றிவிடுங்கள் என்று அல்லவா கூறுவாய்? ஒரு நிமிடம் காற்றில்லையென்றால் உன் நிலை இவ்வளவு மோசமாம் விடுகிறதே! அது நிரந்தரமாக நின்றுவிட்டால்

உன் நிலை என்னவாகும்? அவ்வாறான காற்று அது எங்கிருந்து உருவாகிறது? அதை உருவாக்குவது யார்? என்பது போன்ற சிந்தனையே உனக்கு வருவதில்லையா?

மனிதா! ஆடு, மாடு போன்ற கால்நடைகளின் அற்புதங்களை நினைவுகொள்!

உதிரம், சாணம், சிறுநீர் போன்ற அசுத்தங்களுக்கிடையில் குடிப் போருக்கு மகிழ்வூட்டக் கூடிய தெளிவான, அருமையான, சுவையான, சுத்தமான பாலை எவ்வாறு அது பிரித்துக் கொடுக்கிறது? இப்படிப்பட்ட பெரும் படைப்பினங்கள் தோன்றியது எங்ஙனம்?

சிந்திப்பாய்!

நன்றாகச் சிந்திப்பாய்!!

உனக்கு

எங்கும் விரைந்திடாதே நில்! இவற்றையும் உன் கண்களுக்குக் காண்பித்துவிட்டுச் செல்!

உன் விழியின் ஒளியை உன் கால் விரல்களின் மீது செலுத்து. அதிலிருந்து உச்சந்தலை வரை நன்றாகப் பார்த்துக் கொள்!

ஓ.... தலையை எப்படிப் பார்ப்பதா?

அட, கண்ணாடியில் முகத்தைக் காண்பித்துப் பார்!

பார்த்துவிட்டாயா?

இரண்டு கால்கள் உள்ளனவே!

அவற்றை இயக்கிப் பார்!

எங்கெல்லாம் செல்கிறாய்?

இரண்டு கரங்களையும் தொட்டுப் பார்! இயக்கிடு

அவற்றைக் கொண்டு என்னவெல்லாம் செய்கிறாய்?

உன் நாவைப் பார்!

அது எவ்வளவு திறன் கொண்டதாக உள்ளது?

அது செயலிழந்து விட்டால்?

உன் மூக்கைப் பார்!

அது எவ்வளவு அருமையாகக் காற்றைச் சுவாசித்து நீ உயிர் வாழ்வதற்குத் துணையாக்கப்பட்டுள்ளது!

உனக்கு அருளப்பட்டுள்ள செவி ஆச்சரியத்திற்குரியதாக இல்லையா?

உன் விழிகள்!

ஆமாம்! விழித்துப் பார்!

என்னவெல்லாம் தெரிகின்றன?

அவை நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்குச் செயல்படுகின்றன அல்லவா?

அவை செயலற்றுப் போய்விட்டால் உன் நிலை!?

உன் இதயம்...!

இப்போது நீ பார்த்துப் படிப்பவை அனைத்தையும் அதில்தானே நிலைக்கச் செய்ய முடியும்!?

இவை எல்லாம் எப்படிப்பட்டக் கருவூலங்கள்?

இவையாவும் எப்படிக் கிடைக்கப் பெற்றாய்?

சிந்தனை செய்!

சீரானவன் சிந்திப்பான் சிந்தித்தோன் சீரடைவான்! சீரடைவோன் சிறப்படைவான் என்பதை மனதில் வை!

உன்னால் என்ன செய்ய முடியும்?

மனித சக்தி, அறிவுத்திறன், வல்லமை என்றெல்லாம் புகழப் படுகிறாயே! உன்னால் என்னதான் செய்ய முடியும்?

உன்னால் ஒன்றுமே செய்ய இயலாது.

பொறு! பொறு! ஒன்றுமே செய்ய இயலாது என்றவுடன் கொதித்து விடாதே!

விண், விண்மீன்கள், மண் போன்றவற்றை உண்டாக்கும் திறன் உனக்குண்டா? உன்னால் முடியாதென்றால் துணைக்கு உன் சாரார் அனைவரையும் அழைத்துக் கொள்!

ஆம்! அது உங்களில் யாவருக்குமே எட்டாச் செயல்தான்.

பூமியில் வாழும் உயிரினங்களில் சில பலத்தாலும், சில உருவத்தாலும் மிகவும் பெரிதாக உள்ளன. சில, மிகவும் சிறிதாகவும், சாதாரண மானதாகவும் உள்ளன.

நீ அற்பமாகக் கருதும் எறும்பு, கொசு போன்றவை இருக்கின்றனவே, அவற்றில் ஏதாவது ஒன்றை உன்னால் படைக்க முடியுமா?

அப்படி உன்னால் படைக்க முடியவில்லை என்றால் குறைந்த பட்சமாக அவை உயிரிழந்து போனால் அவற்றின் உயிரையாவது மீட்டுக் கொடுத்துவிடுவாயா?

இதுவும் இயலாதென்றால் அவற்றில் நின்றும் பிரிந்து செல்லும் உயிரைத் தடுத்து நிறுத்தவாவது உனக்கு இயலுமா?

ஆமாம்! நீ கூறுவதும் சரிதான். கொசு எறும்பு போன்றவை மனிதர்களுக்குத் தீங்கிழைக்கக் கூடியவைதாம். அவற்றை நீ படைக்கக் கூடாது தான். ஆனால் செய்ய இயலாததைச் செய்யத் துண்டியதால்தானே இப்பதிலைக் கூறுகிறாய்?

இருப்பினும் உன் வழிக்கும் வரலாமே!

உனக்குத் தீங்கிழைப்பவற்றை நீ வாழவிடலாமா?

கூடாதல்லவா?

ஒன்று செய் எங்குமே கொசு எறும்பு போன்றவை இல்லாமல் சுத்தமாக அழித்துவிடு!

அதுவும் முடியாதா?

அப்படியானால் உன்னால் என்னதான் செய்ய முடியும்?

உலகில் நீ காணும் பொருட்களில் அணுவளவேனும் யாதொரு பொருளையும் எடுக்காமல் மரம் செடி, கொடி போன்றவற்றை உன்னால் உருவாக்க இயலுமா?

இதுவும் பெரிதாகத் தெரிந்தால் நீ அற்பமாகக் கருதும் துரும்பு இருக்கிறதே, அதையாவது உன்னால் உண்டாக்க முடியுமா?

ஏன்? மேலும் கீழும் விழிக்கிறாய்? அனைத்தும் தாமாகத் தோன்றியவை என் அறிவாற்றலால் வந்தவை என்றெல்லாம் பிதற்றுகிறாயே? செய்து காண்பித்திடு பார்க்கலாம்?

எங்கே அழைத்து வா, உன் அறிவுத்திறனை!

ஆடு, மாடு போன்ற கால்நடைகளின் உணவான புல், தவிடு, பிண்ணாக்கு, தண்ணீர் ஆகியவற்றை ஒன்று சேர்த்து ஆட்டிப் பிழிந்து கால்நடைகள் தருவதைப் போன்ற பாலை உருவாக்கிவிடுவாயா?

ஏன் பாத்திரத்தைத் தூக்கிக் கொண்டு ஊர் ஊராகவும், தெருத் தெருவாகவும் அலைந்து கால்நடைகளைத் தேடுகிறாய்? பால் உற்பத்தித் தொழிற்சாலை என்ற பெயரில் ஓர் ஆலையைத் திறந்து. பாலைத் தயாரித்து, பால் பற்றாக்குறையான பகுதிகளுக்கு அனுப்பி பயன்பெறலாம்தானே?

ம்... சாத்தியமே இல்லையா?

உலகிலுள்ள எப்பொருளையும் உண்டு பண்ணவோ, படைக்கவோ உனக்கு இயலவில்லை! அவற்றை அழித்தாவது விடுவாயா?

நீ மானமுள்ள மனிதன் அல்லவா? எங்கே இதையாவது செய்திடு பார்க்கலாம்.

ஒரு தாளில் ஒரு ரொட்டித் துண்டை வைத்து உன்னிடம் கொடுத்து இதை அழித்து விடு என்று கூறப்பட்டால் அதை நீ அழித்து விடுவாயா?

கையிலிருக்கும் தாளைத் தீயில் போட்டு கரித்துவிட்டு ரொட்டியை வாயில் போட்டு ருசித்துவிட்டு அழித்துவிட்டேன் என்பாயோ!

ஆமாம் உன்னால் வேறென்ன செய்யமுடியும்!

நன்றாகத் தெரிந்துகொள்!

எரிந்தது அழியவில்லை. சாம்பலாக மாறிவிட்டது.

நீ உண்டது என்னவாகியிருக்கமென்பதை நீயே அறிவாய்? நானும் 'கூறவேண்டும்?

மனிதா! உனக்கு யாதொரு வல்லமையும் கிடையாது எந்தவொரு பொருளையும் உன்னால் உருவாக்கவும் இயலவில்லையே! அழிக்கவும் இயலவில்லை.

ஏன் உன்னையே நீ அழித்துக் கொள்ளவும் இயலாது! மரித்து விட்டால் மண்ணோடு கலந்திடுவாய். அழியமாட்டாய்!

இப்பொழுது கூறு உன்னால் என்னதான் செய்யமுடியும்?

உனக்கப்பாற்பட்ட சக்தி!

இப்பொழுது உன் நெஞ்சிலே சில ஐய முட்கள்?

ஆமாம்! என்ன? என்ன?? இவையெல்லாம் என்ன?

இவற்றையெல்லாம் படைத்தது யார்?

இவற்றுக்கெல்லாம் அதிகாரி யார்?

இவற்றை இயக்குவது யார்?

எழு... !

நேராக தேன் கூடு இருக்குமிடம் செல்!

கூட்டை நன்றாகப் பார்!

தேனைப் பற்றிய அற்புதங்களை நீ அறிவாயா?

தேன் என்னவென்று உனக்குத் தெரியுமா?

இதோ சொல்கிறேன் கவனி!

பல தாவரங்களின் மலர்களிலிருந்து உணவருந்தி தேனீ தன் கூட்டையடைந்து, தன் வயிற்றிலிருந்து வெளியாக்கும் பல நிறங்களைக் கொண்ட திரவம்தான் தேன்! மனிதர்களுக்குச் சிகிச்சை தரக்கூடிய பல மருந்துகளும் அதிலுண்டு. இதை அறிய வேண்டுமா அதை நீ அருந்து!

தேனீக்களின் ரகசியத்தை நீ அறிவாயா?

தேன் கூட்டிற்குக் கீழே பார்!

சில ஈக்கள் உயிரற்றுக் கிடக்கின்றன. அவற்றிக்கு ஏன் இந்நிலை?

அவற்றைக் கொன்றது யார் என்ற சில வினாக்கள் உனக்கு எழுந்திருக்குமே?

தேனீக்கள் மலர்களிலிருந்து உணவருந்திவிட்டுத் திரும்பிய உடன், நல்ல தாவரங்களின் மலரிலிருந்து உணவருந்தி வந்த ஈக்களை ராணி ஈ தன் கூட்டுடன் சேர்த்துக் கொள்ளும். நச்சுப் பூக்களிலிருந்து உணவருந்தி வரும் ஈயைத் தன் வாயாலே வெட்டிக் கொன்றுவிடும்!

மரித்துகிடக்கும் ஈக்களை எடுத்துப் பார்! அதன் உடல்களில் காயத்தைக் காண்பாய்!

தேனீக்களை வழி நடத்துவதற்கென்று எப்படி ராணி ஈ ஒன்று இருந்து வழி நடத்துகிறதோ, அதே போன்றுதான் இவ்வுலகை உனக்கப்பாற்பட்ட சக்தி யொன்று வழி நடத்திச் செல்கிறது. ஆக்கம், அழிவு போன்ற அனைத் தையும் செய்யக்கூடிய அந்த சக்தியே உன்னையும், உன் சாராரையும், உனக்குத் தேவையான அனைத்தையும் படைத்த மாபெரும் சக்தி! எதுவும் அந்த சக்தியின்றித் தானாக வந்ததில்லை.

இப்போது ஒன்று செய்!

நீ இந்நூலை எடுத்துக் கொண்டு ஒருவனிடம் சென்று, “பாருங்களேன்! நேற்று நான் வீட்டில் அமர்ந்திருந்தபோது இந்நூல் பூமியிலிருந்து அப்படியே எழுந்து மேலே வந்துவிட்டது. எடுத்துப் பார்த்தேன். எதுவுமே எழுதப்படாமல் இருந்தது. சிறிது நேரத்தில் எழுத்துக்கள் பறந்து வந்து ஒட்டிக்கொண்டன. நானும் பார்த்துக் கொண்டே அமர்ந்திருந்தேன்.“ என்று கூறினால் அவன் உன்னைப் “பைத்தியம்“ என்றுதானே கூறுவான்? அல்லது வேறொருவன் வந்து உன்னிடம் அப்படிக் கூறினால் நீ அவனை அப்படித்தானே பைத்தியம் என்று கூறுவாய்? ஒருபோதும் அவனை நீ வாழ்த்த முடியாதுதானே!

சாதாரண நூலை உருவாக்குவதற்கு ஒருவன் இல்லாமல் முடியவே முடியாதென்றால், உலகமும், அதில் அடங்கியுள்ள கருவூலங்களும், இன்னும் நீயும், உன்னில் அடங்கியுள்ள கருவூலங்களும் பெரும் சக்தி ஒன்று இல்லாமல் எப்படித்தானாக வந்திருக்கமுடியும்?

சற்று எண்ணிப்பார்.

ஏதாவது தானாக வருமா?

நீ காணும் யாவையும் படைத்த அச்சக்தியை உன்கண்களால் காண முடியாது!

கண்கள் காணாததை நம்ப மாட்டாய். அது உன் பழக்கம்தானே?

ஏன் உன் கண்களால் அதைக் காணமுடியவில்லை என்பதைச் சிந்திக்காததும் உன் பழக்கம்தானே!

நன்கு சிந்தனை செய்!

உனக்கு அறிவு இருக்கிறதா?

கோபம் கொள்ளாதே!

உன்னைச் சிறுமைப்படுத்தும் நோக்கமல்ல.

என் கேள்விக்குப் பதில் மட்டுமே தேவை!

உனக்கு அறிவு இருக்கிறதா?

இருக்கிறதென்கிறாயே அதை நீ பார்த்தாயா?

அறிவெனும் சக்தியொன்று உன்டென்றால், அதை நீ ஏன் பார்க்கவில்லை?

சரி... உன்னால்தான் அதைப் பார்க்க முடியவில்லை. பிறரின் கண்களுக்காவது காண்பிக்கமுடியுமா?

இருக்கிறதென்று உறுதியாக நம்புகிறாயே? ஏன் காண்பிக்க மறுக்கிறாய்?

காண்பி! காண்பி!! அதைக் கண்களுக்குக் காண்பி!!!

முடியாது! முடியவே முடியாது!! அதைக் கண்களுக்கு காண்பிப்பதென்பது உன்னால் மட்டுமல்ல, உன்னைவிடத் தேர்ந்த எவர் வந்தாலும் முடியாது!

ஆனால் வாள் முனையில் நீ நிறுத்தப்பட்டுக் கேட்கப்பட்டாலும் அறிவு எனும் சக்தி ஒன்று உண்டு என்றுதான் வீரக்குரல் கொடுப்பாய்!

சாதாரண சக்தி!

பிரிந்து செல்லும் உயிரைத் தடுத்து நிறுத்தும் வல்லமையற்ற சக்தி!

எதையுமே படைக்கும் திறனற்ற சக்தி!

குறைந்த அளவு சிறு துரும்பையேனும் அழிக்கும் ஆற்றலற்ற சக்தி! இதையே உன் கண்களால் காணமுடியவில்லை என்றால் விண், வீண்மீன்கள், மண், மரம், செடி, கொடி, தானியங்கள், பழவகைகள், காய் வகைகள், மலர் வகைகள், கால்நடைகள், பால், தேன் தண்ணீர் அதிலுள்ளவை அப்பப்பா! எண்ணவே முடியவில்லையே! இன்னும் மனிதா நீ....! இப்படிப்பட்ட அதிசயமானவற்றைப் படைத்துப் பாதுகாத்துவரும் அப்பெரும் சக்தியை உன் கண்கள் எப்படிக் கண்டு கொள்ளும்?

பதில் கூறு! ஏன் தலையைத் தடவுகிறாய்?

ஆமாம்! ஒருபோதும் அதைக் கண்களால் காணவே முடியாது. ஆனால் இதயக் கண்கள் நிச்சயம் கண்டுகொள்ளும்!

நீ எழுதுவது, படிப்பது, இன்னும் பல சாதனைகளையும் சாகசங்களையும் செய்வது அறிவு இருப்பதற்கான அடையாளங்கள்தானே? இவை யாவும் ஒருவனிடமில்லையாயின் அவனை அறிவிலி என்றுதானே வருணிப்பாய்? சாதாரண இச்சிறிய செயல்களைச் செய்வதற்கு அறிவெனும் சக்தியின்றி முடியாதென்றால், உலகையும் அதிலுள்ளவை அனைத்தையும் படைத்துப் பாதுகாப்பதற்கு பெரும் சக்தி ஒன்று இல்லையாயின் எப்படித்தான் அவை உருவாகி இருக்க முடியும்? உலகிலுள்ள அனைத்துப் பொருட்களும் உன் சக்திக்கு அப்பாற்பட்ட சக்தி இருப்பதற்கான அடையாளங்கள் என்பதில் எவ்விதச் சந்தேகமே இல்லையே.

அதன் பெயர் என்ன?

நீ செய்யும் செயல்களுக்குத் துணை புரியும் சக்திக்கு அறிவு என்று

பெயர் சூட்டி, அச்சக்தியை அறிவென்றே அழைக்கிறாய். அதே

போன்று உன்னால் செய்ய முடியாதவற்றைச் செய்யும் அப்பெரும்

சக்திக்கு இறைவன், படைத்தவன் போன்ற பெயர்களைக் கொண்டு அழைக்கிறாய். எவ்வாறு அறிவெனும் சக்திக்குக் கட்டுப்பட்டு நடக்கிறாயோ அதைவிட அதிகமாக இறைவனுக்குக் கட்டுப்பட்டு நடந்தாக வேண்டும்.

இறைவன்! அவன் தனித்தவன். யாதொரு இணை, துணையற்றவன்

இன்னும் அவன் யாதொரு தேவையுமற்றவன்.

அவன் தான் அல்லாஹ் எனும் ஏக இறைவன் படைப்பவன், ஒழுங்காக அமைத்து உண்டாக்கு பவன், உருவமளிப்பவன். அவனுக்கு அழகிய திருப்பெயர்கள் உள்ளன. வானங்களிலும் பூமியிலும் உள்ளவை யாவும் அவனைத் துதிக்கின்றன அவனே யாவரையும் மிகைத்தவன். திருக்குர்ஆன் 59:24

அல்லாஹ் என்ற உடன் அலறிவிடாதே! நீ நினைப்பதுபோன்று அல்லாஹ் என்பது ஒரு தனிக்கடவுளின் பெயரல்ல அல்லாஹ் எனும் அரபுச் சொல்லிற்கு ஏக இறைவன் என்றுதான் பொருள். அது அரபு நாட்டுக் கடவுளும் அல்ல. மனித குலம் அனைத்திற்கும் பொதுவான ஒரே கடவுள். மனித இனமேம்பாட்டிற்கு அடிப்படை இதுதான். God என்று சொன்னால் அது அமெரிக்கா அல்லது பிரிட்டன் கடவுள் என்பாயோ! தமிழ் மொழியில் கடவுள், இறைவன் என்பாய், ஆம் அது இறைவனைக் குறிக்கும் ஆங்கிலச் சொல். அல்லாஹ் என்பது இறைவனைக் குறிக்கும் அரபுச் சொல். இறைவன் அனைவருக்கும் பொதுவானவன்.

இப்போது உண்மையை விளங்கிக் கொண்டாயா?

இறைவனை ஏன் வழிபட வேண்டும்?

உலகில் உன்னைப்போன்ற மனிதனிடம் சில நொடிகளுக்கென வாங்கித்திருப்பும் சாதாரணப் பொருட்களுக்கு எவ்வளவு மகிழ்வோடு நன்றி என்று கூறுகிறாய்! உன் தாய் உன் மீது வைத்துள்ள அன்பை விட எழுபது மடங்கு அதிகமாக உன்மீது அன்பை வைத்து உனக்காக யாவற்றையும் படைத்துள்ளானே இறைவன் அவனுக்கு நீ எவ்வளவு நன்றிகள் சொல்ல வேண்டுமென்பதை ஒரு நிமிடம் எண்ணிப்பார்!

நீ பணிபுரியும் துறையில் வலப்புறம், இடப்புறமென வேகமாக விரைகிறாய்! உனக்கு மேலுள்ள அதிகாரிகளில் ஒருவரைக் கண்டுவிட்டால் கையை மேலே தூக்குகிறாய்! ஒரு நிமிடமும் தாமதம் கூடாதென தினமும் பணிக்கு விரைகிறாய்! கட்டளை மாறாமல் அனைத்தையும் செய்து முடிக்கிறாய்! முப்பது தினங்கள் முழுமையான பின்னே ஊதியம் பெறுகிறாய்!

ஐம்பது நூறு எனப் பதிக்கப்பட்டுள்ள அற்பமான காகிதத்திற்காக உன்னையே நீ மறந்து உன்னைத் தாழ்த்திச் செயல்படுகிறாயே! உன்னையும், நீ உயிர் வாழ்வதற்கென எண்ணிலடங்கா பல பொருட்களையும் படைத்து நீ பணிபுரியும் முன்னே இலவசமாக அளித்து உன் தேவை இனியுமென்ன கேளும்! நான் தருகிறேன். மேலும், என்னிடம் மட்டுமே கேட்பவனை அன்பாகப் பார்க்கிறேன். அள்ளி அளிக்கிறேன். கேட்காதவனை வெறுக்கிறேன். இன்னும் சபிக்கிறேன். கேட்பவனுக்கு அளிக்காததால் வெட்கமடைகிறேன். கேள் மனிதா! கேள்! என்னிடமே கேள்! எனக் கூறுகிற இறைவனுக்கு நீ என்ன செய்தாலும், எவ்வளவு நன்றிகள் செலுத்தினாலும் அவன் அளித்துள்ள அருட்கொடைகளுக்கு ஈடாகுமா?

நீ பணிபுரியும் துறையில் சில தவறுகள் ஏற்படுவதால் அதற்கேற்ப பிரதிபலன் அளிக்கப்படாமல் இருக்கிறாயா? அற்பமான சில ஊதியங்களுக்காகவும் அதற்கெனச் செய்யும் பணியில் சில பிழைகளுக் காகவும் சில மாதங்கள் சம்பளம் பறிமுதல், வேலை நீக்கம் சிறைவைப்பு போன்ற தண்டனைகளை உனக்கு மேலுள்ள அதிகாரிகள் வழங்குகிறார்களே! எல்லோருக்கும் அதிகாரியான இறைவனிடம் நீ

பெற்றவற்றுக்குப் பணியாற்றவில்லையாயின் அவனுடைய தண்டனை உன்னை வந்தடையாது என்பது என்ன நிச்சயம்?

இறைவனின் தண்டனை உன்னை வந்தடையாமல் அவன் அருள் மட்டும் வந்தடைய வேண்டுமெனில் நீ இறைவனின் ஏவல்களை ஏற்று விலக்கல்களைத் தவிர்த்து நடப்பது அவசியமாகும்.

அதனால் என்ன பலன்?

இறைவனுக்கு அடிபணிவதால் நீ பெறவிருக்கும் பலன்களை இறைவேதம் குர்ஆன் கோடிட்டுக் காண்பிக்கிறது.

“இறைவனை நம்பி நற்கருமங்களைச் செய்கிறவர்களுக்கு சதா நீரருவிகள் ஓடிக் கொண்டிருக்கும் சோலைகள் உள்ளன“ என்ற நற்செய்தியை (நபியே!) நீர் கூறும்! திருக்குர்ஆன் 2:25

தன் இறைவனின் சன்னிதானத்தை அஞ்சுபவனுக்கு இரண்டு சோலைகள் உள்ளன. திருக்குர்ஆன் 55:46

அவை இரண்டும் கிளைகள் அடர்ந்தவையாகும். திருக்குர்ஆன் 55:48

அவை இரண்டிலும் ஊற்றுக்கள் உதித்தோடிக் கொண்டே இருக்கும். திருக்குர்ஆன் 55:40

அவை இரண்டிலும், ஒவ்வொரு கனிவர்க்கத்திலும் இரண்டு வகைகளுண்டு. திருக்குர்ஆன் 55:52

‘இஸ்தப்ரக்‘ எனப்படும் பட்டு மெத்தையின் மீது சாய்ந்தவர்களாக அவர்கள் இருப்பார்கள். அவ்விரண்டு சோலைகளில் கனிவர்க்கங்கள் (பறிப்பதற்கு) நெருங்கி இருக்கும். திருக்குர்ஆன் 55:54

அவற்றில் கீழ் நோக்கிய பார்வைகளையுடைய (அழகிய) கன்னிகளும் இருப்பார்கள். இவர்களுக்கு முன்னர் அவர்களை மனித இனமோ, ஜின் இனமோ தீண்டியதில்லை. திருக்குர்ஆன் 55:56

அவர்கள் சிகப்புமணிகளைப்போலும் பவளங்களைப் போலும் இருப்பார்கள். திருக்குர்ஆன் 55:58

நன்மைக்கு நன்மையேயன்றி (ஏதேனும் வேறு) கூலியுண்டா? திருக்குர்ஆன் 55:60

தங்களின் இறைவனை மறுப்பவர்களுக்கு (கடுமையான) நரக வேதனையுண்டு. அது மிக கெட்ட தங்குமிடமாகும். திருக்குர்ஆன் 67:7

அதில் அவர்கள் (தூக்கி) எறியப்படும்போது (கழுதையின் பெரும் சப்தத்தைப்போல்) அதன் கொதி சப்தத்தைக் கேட்பார்கள், அது கோபத்தால் வெடித்து விடுவதைப்போன்று குமுறிக் கொண்டிருக்கும். திருக்குர்ஆன் 67:7

அதில் ஒருகூட்டம் எறியப்படும்போதெல்லாம் (இதனை) அச்சுறுத்தி எச்சரிக்கும் தூதர்கள் உங்களிடம் வரவில்லையா?“ என அதன் காவலர் கேட்பார். திருக்குர்ஆன் 67:9

(அதற்கு) “நாங்கள் செவி சாய்த்து சிந்தித்திருந்தால் (இன்று) நரகவாசிகளாக இருக்கமாட்டோமே“ என (மனவேதனையுடன்) கூறுவார்கள். (திருக்குர்ஆன் 67:10)

செய்தாருக்குச் செய்த வினையன்று வேறேது நண்பா?

மரணத்திற்கு பின்பு உன் செயல்களுக்குத் தக்கவாறு உம்முடைய

இறைவன் வழங்கும் மாபெரும் வெகுமதிகள் இவைதாம். உலகிலும் செயல்களுக்குத் தக்க சில வெகுமதிகள் கிடைத்துவிடுகின்றன.

ஒன்றை உள்ளத்தில் ஊன்றிப் பதித்திடு. அதன்படி முழுமையாய்ச் செயல்படு!

கரு இருள் சுமந்துள்ள நேரத்தில் வெளிச்சமற்ற சாலையில் நீயும் உன் நண்பனும் நடந்து சென்று கொண்டிருக்கும் பொழுது.

“நண்பா! இருள் அதிகமாக உள்ளது: வழியில் கற்கள் தம் பற்களை நீட்டிக்கொண்டிருக்கலாம். காலைத் தரையில் இழுத்து நடக்காமல் தூக்கி வைத்தே நடந்து வா“ என்று கூறுகையில் நண்பனின் உபதேசத்தைக் கேட்டு நடப்பின் ஏதும் தீங்கில்லையே. அதற்கு மாறாக கற்கள் தன்பற்களை நீட்டி இருப்பதை என் கண்கள் காணவில்லையே எனக்கூறி உன் விருப்பப்படி நடக்கிறாய். சில நொடிகளில் கல்லில் இடிபட்டு பூமியை முத்தமிட்டுப் பல்லுடை பெற்றுவிட்டாய்! ஏன்தான் உனக்கு இந்நிலையோ? நண்பனின் நல்லுபதேசத்தை ஏற்றிருந்தால், கல் இருந்தாலும் இல்லாமற்போனாலும் நலனின்றி வேறில்லையே!

சொர்க்கமாவது, நரகமாவது? யார் சொன்னது? இவை எல்லாம் மூட நம்பிக்கை! பெரும் மூட நம்பிக்கை என்றா கூறுகிறாய்?

உன் கூற்றுப்படியே சொர்க்கம் நரகம் எதுவும் மரணத்திற்குப் பின்பு கிடையாது என வைத்துக்கொள்வோம். நாளை அவை உன் கூற்றுப்படியே இல்லையாயின் தப்பிவிடலாம். உண்மையிலே அவை இருக்குமாயின் நீ அதை பொய்ப்பித்ததின் விளைவாக உனக்குக் கொடுக்கப்படும் தண்டனையிலிருந்து யார் உன்னைக் காப்பாற்றுவார்? அவற்றை மறுப்பதால் உலகிலாவது ஏதேனும் பயன்கள் உண்டா? அப்படியும் எதுவுமில்லையே!

ஆனால் அதை ஏற்றுக் கொள்வதனால் எவ்வித நஷ்டமும் கிடையாதே! அவை இருக்குமாயின் மெய்ப்பித்த பலனைப் பெற்று விடுவாயே! மரணத்திற்குப்பின் கிடைக்கும் சொர்க்கம் நரகத்தைக்கூட விட்டு விடு! உலகிலேயே அவற்றை ஏற்பதால் சொர்க்கமும், ஏற்காததால் நரகமும் பெற்றுவிடுகிறாயே!

அப்படியா? இதோ பார்!

உன் மண்டையை உடைத்து உதிரத்தைச் சிந்திவிடு! வாளை எடுத்து உடலெங்கும் வெட்டிக்கொள்! உடலில் ஒரு புறம் ஈட்டியால் குத்தி மறுபுறம் எடுத்துக்கொள்! சாட்டையால் உடம்பெல்லாம் அடித்துக் கொள்! அக்கினியைக் கையில் ஏந்தி வைத்துக்கொள்! அக்கினியில் நடைபோடு! நடப்பதற்குப் பதிலாக உருண்டோடு. பாறாங்கல்லைச் சுமந்து செல்! அப்போதுதான் நரகத்திலிருந்து தப்பி சொர்க்கம் புகுவாய் என்றெல்லாம் கூறி உன்னை அறிவிலியாக்க வில்லையே! இப்படிப்பட்ட துன்பங்களை எல்லாம் பெற்றும் கூட சுவர்க்கம் கிடைக்கவில்லையே என வருந்துவதற்கு!

மனிதா நீ மனிதானகவே இரு! மாறிவிடாதே! உதிரத்தைப் புசிக்காதே! உடலைக் கெடுக்காதே! தானாகச் செத்தவற்றை உண்ணாதே! உயரிய வியாதியை உடலுக்கு உறவினனாக ஆக்காதே!

மதுவை அருந்தாதே! மண்டையைக் குழப்பாதே!

கழிவறையில் பேசினால் கிருமிகள் வாயுள்புகும் அதனாலும் உடல் நலம் போகும்! ஒன்றாக இருவர் அங்கு அமர்ந்து பேசினால் வெட்கம் விலகிவிடும்.

நின்று கொண்டு சிறுநீர் கழித்தால் சில துளிகள் நின்றுவிடும் அதனாலும் சிறு நீரகத்தில் கல்லடைப்பு நோய் வந்துவிடும்!

உன் இச்சையை உம் மனைவியரிடமின்றி பிறரிடம் தீர்க்காதே! தீரா நோயை வரவழைக்காதே!

உடல், உடை, இடம், உள்ளம் போன்றவைகளைத் தூய்மையாக்கிடு! எப்போதும் அப்படியே இருந்திடு!

மனிதனை மதித்திடு! மனிதநேயம் காத்திடு!

இவையாவும் என் கட்டளைகள். செவியேற்றிடு!

இதயத்தில் பதித்திடு! இதன்படி செயல்படு என்றுதானே இறைவன் கூறுகிறான்.

இவைபோன்ற செயல்கள் செய்தால் நன்மையின்றி வேறு எதுவுமில்லையே! அதோடு விடவில்லை. மேலும் எவ்வளவு மேலான செயல்கள் கற்பிக்கப்படுகின்றன என்பதைப் பார்!

ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்து படைக்கப்பட்டவர்களே மனிதர்கள். இறைவன் முன்னிலையில் இறைவனிடம் பயபக்தியுடையவர்களைத் தவிர உங்களில் யாரும் ஒருவரைவிட ஒருவர் சிறந்தவர் அல்லர். யாரும் எவரையும் தரம் தாழ்த்த முடியாது. வல்ல இறைவனைத் தவிர!

இறைவனான என்னையே ஐவேளைத் தொழுதிடு! அதைக்கொண்டு மனதை ஒரு நிலைப்படுத்திடு! தொழுகையில் தோளோடு தோள் இணைத்திடு! ஆண்டான், அடிமை, கருப்பன், சிவப்பன் இல்லை இல்லவே இல்லை என்பதை உலகிற்கு உணர்த்திடு! அளவை நிறுவையில் மோசடி செய்யாது வாழ்ந்திடு! பிறரின் பொருட்களை எந்த வகையிலும் சுரண்டாதே! உன்னுடைய உழைப்புதான் உன்னை உயர்த்தும். நியாயமான வழிகளில் உழைத்துச் செல்வங்களைச் சேர்த்திடு! செல்வம் மிகுதியாக இருக்கும்போது நூற்றுக்கு இரண்டரை சதவீதமென ஜக்காத் எனும் ஏழைவரி கொடுத்திடு! உன் சொத்தைத் தூய்மைப்படுத்திடு! உன் சமுதாயத்தை உயர்த்திடு! வருடத்தில் ஒருமுறை முப்பது தினங்கள் நோன்பை நோற்றிடு! உடல் நோயை அகற்றிடு!

“தாயின் காலடியில்தான் சுவர்க்கம் இருக்கிறது“

பெற்றோரை மதித்திடு!

கற்றோரை மதித்திடு!

பெரியோரை மதித்திடு!

அண்டை வீட்டாரிடம் அன்போடு பழகிடு!

குழந்தைகளுடன் அன்பு வைத்திடு!

நீ மட்டும் உண்டால் போதாது இருப்பதை இல்லாதோர்க்குப் பங்கிடு!

பொறாமை கொள்ளாதிருந்திடு!

பெருமையை அடியோடு அழித்திடு!

இவை இறைக் கட்டளைகள்!

இறைவன் கூறுவது இதுதான்.

குர்ஆனில் உள்ளது இது தான்.

இஸ்லாமும் இதுதான்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் வலியுறுத்தியதும் இதுதான்.

இஸ்லாம் என்றவுடன் மற்ற மதங்களைப் போல் ஏதோ ஒரு மதமென எண்ணிக் கொள்ளாதே!

சாந்தியின் இல்லம் இஸ்லாம்.

கண்ணியத்தின் இல்லம் இஸ்லாம்.

சுருங்கச் சொன்னால் ISLAM IS THE WAY OF THE LIFE.

மனிதனை வழிநடத்திச் செல்லும் சீரான வழியில் அவன் சென்று இறைவனின் சிறப்பான கட்டளைகளை ஏற்று நடப்பதால் ஒருவன் கெட்டு விடுவான் என்று உன்னால் கூற முடியுமா?

ஆமாம், மனிதன் உயர்வடைவான் என்றால் அதை ஏற்று அதன் வழி செல்வதே நல்லதா? அல்லது அதை மறுத்து அதன் வழியைத் தடுத்துக் கொள்வதே நல்லதா?

நான் ஏதும் கூறுவதற்கில்லை. இதை நான் உன் சிந்தனைக்கே விட்டுவிடுகிறேன்.

(இஸ்லாம் எனும் இந்த) மார்க்கத்தில் நிர்ப்பந்தமில்லை வழிகேட்டிலிருந்து நேர்வழி முற்றிலும் தெளிவாகிவிட்டது எனவே, வழி கெடுப்பவற்றை நிராகரித்து இறைவன் மீது நம்பிக்கை கொள்கிறவர் அறுந்துவிடாத கெட்டியான கயிற்றை பற்றிக் கொண்டார். திருக்குர்ஆன் 2:256

“இந்தச் சத்திய (வேதம்) உங்கள் இறைவனிடமிருந்து (வந்து)ள்ளது“ எனவே, விரும்புபவர் (அதனை) நம்பிக்கை கொள்ளட்டும். விரும்புபவர் (அதனை) நிராகரிக்கட்டும். அநியாயக்காரர்களுக்கு (நரக) நெருப்பை உறுதியாக நாம் சித்தப்படுத்தியுள்ளளோம் (அந்நெருப்பின்) சுவர் அவர்களைச் சூழ்ந்து கொள்ளும் அவர்கள் (தண்ணீர் கேட்டு) இரட்சிக்கத் தேடினால் உருக்கப்பட்ட செம்பு போன்ற தண்ணீரைக் கொண்டே இரட்சிக்கப்படுவார்கள். (அவர்களின்) முகங்களை அது சுட்டுக் கருக்கி விடும் அது மிகக் கேடான பானமாகும். இன்னும், இறங்கும் தலத்தில் அதுவே மிகக் கெட்டதாகும். திருக்குர்ஆன் 18:29

ஒன்றை நன்றாகத் தெரிந்து கொள்! பிற மதங்களைப் போன்று இஸ்லாம் கூறியவற்றைக் கூற்றோடு விட்டு விடுவதல்ல சொன்னதைச் செய்வதும் செய்யச் சாத்தியம் உள்ளதைச் சொல்வதும் தான் இஸ்லாம்!

இந்நூலாசிரியரின் நண்பர் ஒருவர் எம்.எஸ்.சி பி.ஹெச்.டி பட்டதாரி. கற்கும் காலத்தில் மாணவர் சங்கத் தலைவர். வெளியில் சில நாடுகளைச் சுற்றியவர். மனித ஒற்றுமை, சமத்துவம், நியாயம் போன்ற செல்வங்களை உயிராக்கத் துடித்தவர் பொதுவுடைமை இயக்கத்தில் முக்கியமானோரில் ஒருவர். ஆனால் சாதியால் தாழ்த்தப்பட்டவர். ஒருநாள் அவர் தம் தோழமை இயக்கத்தில் தமக்கு மேல் பதவியிலுள்ள தோழர் ஒருவரின் இல்லம் சென்று பேசிக் கொண்டிருந்தபோது.

“தோழர் அவர்களே! நான் தங்களின் மகளை மணமுடிக்க விரும்புகிறன்“ என்று கூறியிருக்கிறார். இதைக்கேட்ட உடன், வீட்டுக்காரர்.

“எழுடா நாயே! முதலில் வெளியே போய்விடு“ என்று கடுமையான வார்த்தைகளால் பதிலுரைத்திருக்கிறார். இதைக்கேட்ட அவர் அவசரப்படாமல்,

“ஏன் தோழரே இவ்வளவு கோபம்“ என வினவ,

“ஏண்டா! நான் என்ன சாதி? நீ என்ன சாதி? என்று கேள்வி எழுப்பியிருக்கிறார் அவர்

அவர் அப்போதும் நிதானமாக!

“தோழர் அவர்களே! நீங்கள்தானே பல மேடைகளில் நாமெல்லாம் தோழர்களே! சகோதரர்களே! நம்மில் எவ்வித வேற்றுமையும் கிடையாது. சாதி இல்லை, மதமில்லை. மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள்‘ என்று பேசியது. பின்னர் ஏன் இன்று இவ்வளவு ஆவேசப்படுகிறீர்கள்?“ என்று வினவியதற்கு,

“டேய் அதெல்லாம் நாட்டிற்கு மட்டும்தான்! வீட்டிற்கு அல்ல. இதை என்ன குடும்பம் என்று நினைத்தாயா இல்லை...“ என்று கடுமையாகப் பேசினார்.

தோழமை அன்பில் துவண்டுபோன அவர் அங்கிருந்து வெளியேறினார்.

மனிதா! தோழமை இயக்கங்களின் கொள்கைப்பிடிப்பைப் பார்த்தாயா? சொல் ஒன்று செயல் ஒன்று.

உதட்டில் ஒன்று! உள்ளத்தில் ஒன்று. இப்படிப்பட்ட பசுத்தோல் போர்த்திய புலிகளின் பின்னே சென்றுவிடாதே! மனிதனை மனிதனாக மதிக்கும் இஸ்லாமிய மார்க்கமே உன் வெற்றிக்கும் மேன்மைக்கும் வழிவகுக்கும். எனவே நீ இதன் வழியில் வந்துவிடலாமல்லவா! இறைவனின் ஏவல்படி செயல்படலாமல்லவா! அப்போது நிச்சயமாக நீ உயர்ந்து நிற்பாய்!

தமிழகத்தில் காணப்படும் பள்ளிவாசல்கள் எனும் இறை இல்லங்களுக்குச் சென்று பார்! முதல் வரிசை உயர்சாதியினருக்கு, இரண்டாவது வரிசை அதற்கடுத்த சாதியினருக்கு, மூன்றாவது வரிசை இடைப்பட்ட சாதியினருக்கு, கடைசி வரிசை தாழ்ந்த மற்றும் சண்டாளர்களுக்கு என்று ஏதேனும் பாகுபாடு உள்ளதா?

நீ எந்த சாதியாக இருந்தாலும் ஆண், பெண் உறவில் வெளிப்பட்ட அற்பமான விந்திலிருந்துதானே பிறந்தாய். எவராவது தங்கத்திலிருந்து பிறந்துள்ளரா? பிறப்பால், குலத்தால் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற மடமையான கூச்சலை இஸ்லாம் குழிதோன்றிப் புதைத்துவிட்டது.

அட, நீ மக்கா அல்லது மதீனாவுக்குச் சென்றுபார்! நபிகள் நாயகம் முஹம்மத்(ஸல்) அவர்களின் குடும்பத்தாராக இருந்தாலும் தாமதமாக

வந்தால் பின் வரிசையில்தான் அமரவேண்டும் எனக்கு முன்னுரிமை

என்று முந்தமுடியாது.

உங்களில் இறையச்சமிக்கவர்கள்தாம் இறைவனிடத்தில் உயர்ந்தவர்கள்!

குர்ஆன் இறைவேதமா?

திருக்குர்ஆன் ஏதோ முஸ்லிம்களுக்கு மாத்திரமே உள்ள வேதம் போலும் என்று எண்ணுகிறாயா? இப்போதுதான் நீ பெரும் தவறு செய்கிறாய்.

ஆமாம்! குர்ஆன் ஒன்றும் முஸ்லிம்களின் குடும்பச் சொத்து அல்ல. அது பிரபஞ்சத்திலுள்ள அனைவருக்கும் பொதுவானது. அனைவருக்கும் அறிவுரை வழங்கக் கூடியது. குர்ஆன் தன்னைப் பற்றிக் கூறுவதைப் பார்.

இது (குர்ஆன்) அகிலத்தார் அனைவருக்கும் நல்லுபதேசமே அன்றி வேறில்லை. (திருக்குர்ஆன் 68:52)

ஆம்! குர்ஆன் இறைவேதமேதான். அது உண்மையில் இறைவனால் அருளப்பட்ட நிறைவான வேதம். அதற்குச் சாட்சியாக அதே குர்ஆன் அமைந்துள்ளது.

அட நீதான் நடுநிலையான நியாயமான மனிதனாச்சே திருக்குர்ஆன் அப்படி என்னதான் சொல்கிறது என்பதை ஒருமுறை படித்துப் பார்த்தால் என்ன? பொதுவாக கல்வியில் ஞானம்தானே அதிகரிக்கும்.

இது (இறை) வேதம் இதில் சந்தேகமே இல்லை... திருக்குர்ஆன் 2:2

ஆதாரங்களையும் குர்ஆனே அள்ளித்தருகிறது!

இ(வ்வேதத்)தை (நம் தூதராகிய) அவர் பொய்யாகக் கற்பனை செய்து கொண்டாரெனக் கூறுகிறீர்களா? (அவ்வாறாயின்) நீங்களும் இதைப் போன்று கற்பனை செய்யப்பட்ட பத்து அத்தியாயங்களைக் கொண்டு வாருங்கள். நீங்கள் (உங்கள் கூற்றில்) உண்மையாளராக இருந்தால் அல்லாஹ்வைத் தவிர உங்களுக்குச் சாத்தியமான எல்லாரையுமே (இதில் துணைபுரிய) அழைத்துக் கொள்ளுங்கள் என (நபியே) நீர் கூறும்! திருக்குர்ஆன் 11:13

குர்ஆன் இறைவேதமன்று முஹம்மத்(ஸல்) அவர்களால் கற்பனை செய்யப்பட்டதென்று கூறுகிறாயா, இதோ குர்ஆன் பகிரங்கமாகவே சவால் விடுகிறதே!

குர்ஆன் முஹம்மத் அவர்களால் இயற்றப்பட்டது என்று நீங்கள் கூறுவது உண்மையானால், அவர் போன்று நீங்களும் மனிதர்கள் தான் உங்களால் இந்த குர்ஆன் போன்று இயற்ற முடியுமா? முடியாதென்றால் குர்ஆன் முஹம்மதால் இயற்றப்பட்டதல்ல என்பதும் அது இறைவனால் அருளப்பட்டது என்பதும் உறுதியாகிறது. குர்ஆனைப் போன்றே நூற்றிப்பதினான்கு அத்தியாயங்களைக் கொண்டு வரவேண்டுமெனக் கூறவில்லையே? பத்தே பத்து அத்தியாயங்களைக் கொண்டு வந்தாலே போதும் என்றுதானே கூறுகிறது. அவ்வாறு உன்னால் கொண்டு வர இயலவில்லையாயின் குறைந்தது ஓர் அத்தியாயமாவது கொண்டு வர இயலுமா என்றும் கேட்கிறது.

நம் அடியார் (முஹம்மத்) அவர்களுக்கு அருளியுள்ள (வேதத்)தில் சந்தேகமுடையவர்களாக இருப்பீர்களானால் (அச்சந்தேகத்தில்) உண்மையாளர் களாகவும் இருப்பீர்களானால் அல்லாஹ்வைத் தவிர உங்கள் உதவியாளர்களை (யெல்லாம் ஒன்றாக) அழைத்து (வைத்துக்) கொண்டு இது போன்று ஓர் அத்தியாயமேனும் கொண்டு வாருங்கள். திருக்குர்ஆன் 2:23

வரலாற்று ஏடுகளைப் புரட்டிப் பார்! பதினான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு அரபு நாட்டில் இருந்த அளவிற்குப் பண்டிதர்களும், கவி வல்லவர்களும் அப்போதும் சரி! இப்போதும் சரி எங்குமே இருந்ததில்லை. ஒவ்வொருவரும் கவிகளை இயற்றி தங்களின் மார்பைத் தட்டிக் கொண்டு பெருமையடித்துக் கொள்வார்கள். ஆயினும் எவராலும் குர்ஆனின் இவ்வினாவுக்குப் பதில் கொடுக்கவே இயலவில்லை.

நன்கு தெரிந்து கொள்! இதுவரையில் எவரும் குர்ஆனிற்கு ஈடாக ஒரு வசனங்கூடக் கொண்டு வந்ததாகச் சரித்திரமே இல்லை. இனிமேலும் யாராலும் கொண்டு வரவே இயலாது.

நாற்பது, ஐம்பது பக்கங்களைக் கொண்டதுதான் ஒரு வசனம் என்று குர்ஆன் குறிப்பிடவில்லை. இரண்டு மூன்று வரிகளைக் கொண்டதும் ஒரு வசனம்தான். இப்போது நீ உலகனைத்தையும் ஒன்று சேர்த்துக் கொண்டு முயற்சித்தாலும் தோல்வியைத்தான் தொட்டழைப்பாய்! அதைத்தான் குர்ஆனும் கூறுகிறது.

இந்தக் குர்ஆனைப் போன்ற ஒன்றைக் கொண்டு வருவதற்குகாக மனிதர்களும், ஜின்களும் ஒன்று சேர்ந்து (முயன்று) அவர்கள் ஒருவருக்கொருவர் உதவி புரிபவர்களாக இருந்தாலும் இதுபோன்ற ஒன்றை அவர்களால் கொண்டு வர இயலாது என்று (நபியே) நீர் கூறும்! திருக்குர்ஆன் 17:88

குர்ஆன் முஹம்மத்(ஸல்) அவர்களின் கவியுமன்று கற்பனையுமன்று. எழுத்தறிவு, படிப்பறிவு எதுவுமே இல்லாத அவர்களால் இலக்கிய நடையும் ஏராளமான அறிவுரைகளையும், ஓர் அரசாங்கத்தையும் நாட்டையும் நிர்வகிப்பதற்கான சட்டங்களையும், ஈடற்றவையாகக் கொண்டு வர இயலுமா? அப்படியே முடியுமென்றால் கவியரசர்கள், கல்வியரசர்களால் அதையும்விடச் சிறந்த ஒன்றைக் கொண்டுவர இயலும்தானே? அல்லது குறைந்த பட்சம் அதைப்போன்ற ஒன்றையாவது ஏன் கொண்டு வர இயலாது? அப்படி யாருமே அதற்கு ஈடாக ஒன்றைக் கொண்டு வரமுடியவில்லையே! அது ஏன்?

மக்கா நகர மக்களனைவரும் நபியவர்களிடம் வந்து இதை மாற்றி இதுவல்லாது வேறொரு குர்ஆனைக் கொண்டு வாருங்கள். நாங்கள் எல்லோரும் தங்களை நபியென ஏற்றுக்கொள்கிறோம் என்றார்கள். அப்படி அது அவர்களின் கற்பனைக் கவியாக இருந்திருந்தால் சூழ்நிலைக்குத் தகுந்தவாறு தமக்கும் தம்மைச் சார்ந்தோருக்கும் சாதகமாக மாற்றிக் கொண்டிருப்பார்களே? ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யவில்லையே, ஏன்?

மனிதா! இதோ பார் இறைவேதம் குர்ஆனில் இறைவன் அதைக் கூறிக் காண்பிக்கிறான்.

தெளிவான நம் வசனங்கள் அவர்களிடம் ஓதிக்காண்பிக்கப்பட்டால் நம் சந்திப்பை நம்பாதவர்கள் இதுவல்லாது வேறொரு குர்ஆனைக் கொண்டு வாருங்கள். அல்லது மாற்றிவிடும் எனக் கூறுகிறார்கள். அதற்கு என் மனப் போக்கில் மாற்றிட எனக்கு உரிமை இல்லை. என் மீது இறைச்செய்தியாக அறிவிக்கப்பட்டதைத் தவிர வேறெதையும் நான் பின்பற்றுவதில்லை. என் இறைவனுக்கு நான் மாறு செய்தால் மகத்தான நாளின் வேதனைக்கு (நான் ஆளாக வேண்டும். அதை) நான் நிச்சயமாகப் பயப்படுகிறேன் என (நபியே) நீர் கூறும்! திருக்குர்ஆன் 50:15

குர்ஆனின் வசனங்களை அவர்கள் தம் விருப்பப்படி மாற்றும் அதிகாரம் இல்லை என்றால், எப்படி அவர்களே அதைக் கற்பனை செய்திருப்பார்கள்? என்பதைச் சிறிது சிந்தனை செய்ய வேண்டாமா?

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் போதித்து வந்த ஓர் இறைக் கொள்கைப் போதனைகளை எதிர்த்தவர்களும், அதனை அழித்தொழிக்க முற்பட்டவர்களும் யார் தெரியுமா? குலப் பெருமை கொண்டார்கள், ஆதிக்கமும், கர்வமும் உடையவர்கள், பெண்களை இழிவுபடுத்தி வந்தவர்கள், மனிதர்களை அடிமைகளாக்கி கொடுமைப்படுத்தியவர்கள், தாம் பெற்றெடுத்த பெண் குழந்தைகளை உயிருடன் புதைத்தார்கள், கொலை வெறியர்கள்.

ஆனால் இப்படிப்பட்டவர்களும் இறுதியில் இறைவனுக்குப் பணிந்து இன்றைய தினம் முழு அரபுலகமும் முஸ்லிம்களாக வாழ்கிறார்கள். நீ என்ன அவர்களைப் போன்ற கொடியவனா? அவர்களைப் போன்று இதயம் அற்றவனா? சத்தியம் ஏற்றுக்கொள்ளும் எண்ணம் உனக்கு இருக்கிறது. அதை தாமதப்படுத்தி வீணடித்து விடாதே! இன்று முதல் ஆய்வில் இறங்கு! சத்தியம் எதுவோ அதை நீ ஏற்றுக்கொள்!

நண்பா! நீ குர்ஆனைப் படித்துப் பார் இன்றைய உலகம் கூறிக் கொண்டிருக்கும் விஞ்ஞானத்தின் தூண்டுகோலாக குர்ஆன் இருப்பதை நீ காண்பாய்! இதோ உதாரணத்திற்கு சில வசனங்களை மட்டும் பார்.

“மனித, ஜின் கூட்டத்தார்களே! வானங்கள், பூமி ஆகியவற்றின் எல்லைகளைக் கடந்து (விண்வெளிப்பயணம்) செல்ல நீங்கள் சக்தி பெறுவீர்களாயின், (அவ்வாறே) செல்லுங்கள் ஆனால், (அதற்கான விமானம், ராக்கட் போன்ற) சக்தி ஏதும் இல்லாமல் நீங்கள் கடந்து செல்லமுடியாது. (திருக்குர்ஆன் 55:33)

இரண்டு கடல்களையும் ஒன்றோடொன்று அவனே சந்திக்கச் செய்தான். (ஆயினும்) அவற்றிற்கு இடையே ஒரு தடுப்பும் இருக்கிறது் அதை அவை (கலந்து) மீறுவதில்லை. (திருக்குர்ஆன் 55:19)

(உருண்டையாக உள்ள பூமியை இரண்டாகப் பிரிக்கும்போது காணப்படும்) இரண்டு கிழக்கு மற்றும் இரண்டு மேற்கு திசைகளுக்கும் அவனே இறைவன். (திருக்குர்ஆன் 55:17)

உங்ளளுக்காக இப்பூமியை ஒரு விரிப்பாக அவனே அமைத்தான் இன்னும் அதில் உங்களுக்குப் பாதைகளை இலேசாக்கினான் மேலும் வானத்திலிருந்து நீரையும் இறக்கினான் இம் மழை நீரைக் கொண்டு இறைவன் பல விதமான தாவரவர்க்கங்களை ஜோடி ஜோடியாக வெளிப்படுத்துகிறான்“ (திருக்குர்ஆன் 20:53)

நண்பா இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்பின் படி தாவரங்களில் ஆண் பெண் என இரண்டு வகைகள் இருப்பதை நீ அறிவாய் அல்லவா? இதை திருக்குர்ஆன் 1400 ஆண்டுகளுக்கு முன்னரே கூறியுள்ளதே பார்த்தாயா.

உனக்கு பல பணிகள் இருக்கலாம் எனவே இத்தோடு இதை நிறுத்திக் கொள்கிறேன். இன்னும் ஏராளமான வசனங்கள் இது போன்று குர்ஆனில் காணப்படுகின்றன. தமிழாக்கம் செய்யப்பட்டுள்ள குர்ஆனை நீ படித்துப்பார்.

குர்ஆனின் தன்மைகள்!

இறைவனிடமிருந்து அல்லாது மனிதனிடமிருந்து குர்ஆன் அருளப் பட்டிருந்தாலோ, வேறு எங்கிருந்தும் அருளப்பட்டிருந்தாலோ குர்ஆனில் ஏராளமான முரண்பாடுகளைக் காண முடியும். இதில் முரண்பாடில்லை.

அவர்கள் இந்தக் குர்ஆனை (கவனமாக) சிந்திக்க வேண்டாமா? அல்லாஹ் அல்லாத பிறரிடமிருந்து வந்திருந்தால் இதில் ஏராளமான முரண்பாடுகளைக் கண்டிருப்பார்கள். திருக்குர்ஆன் 4:82

இந்தக் குர்ஆனில் மனிதர்களுக்காக சகல விதமான உதாரணங்களையும் (மிக தெளிவாக) விவரித்துள்ளோம். திருக்குர்ஆன் 17:88

மனிதா! குர்ஆனில் முரண்பாடு எதுவும் இல்லை என்பதை அறிய வேண்டுமாயின், அதை நீ அவசியம் படித்தாக வேண்டும். நீ உண்மையில் தெளிவானவன் என்றால் பகவத் கீதை, பைபிள், குர்ஆன் உள்ளிட்ட அனைத்தையும் படித்து அறிந்து, உண்மையில் எது இறைவேதம் என்பதை நன்றாகப் புரிந்து கொண்டு அதன் வழியில் நடக்க வேண்டும்.

சாதி, சம்பிரதாயம், மதம், பாரம்பரியம் ஆகியவற்றை மீறமுடியாது என்ற கோழைத்தனமான வசனங்கள் பேசாதே! சத்தியத்தைத் தேடு அதற்காக உன் உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராக இரு!

விஞ்ஞானம், மருத்துவம், வானவியல், பொருளாதாரம், அரசியல் அமைப்புச் சட்டங்கள், சிவில் மற்றும் குற்றவியல் சட்டங்கள், உதாரணங்கள், வரலாற்று உண்மைகள் இன்னும் கடல் பற்றி அதிசயங்கள் உள்ளிட்ட, மனிதனை வியக்க வைக்கும் கருத்துக் கருவூலங்கள் குர்ஆனில் நிறைந்து காணப்படுகின்றன.

மனிதா! அதை நீ ஒருமுறை படித்துப்பார்! படிப்பவற்றை உன் நினைவில் நிறுத்தி சிந்தித்துப்பார்!

மனிதர்களுக்குத் தேவையான அனைத்து விபரங்களும் குர்ஆனில் உண்டு. எதுவுமே இல்லாமலில்லை. அப்படிப்பட்ட அதனிடம் (குர்ஆனிடம்),

அதற்கு முன்னிருந்தோ அதற்குப் பின்னிருந்தோ உண்மைக்குப் புறம்பான எதுவும் நெருங்காது. இது புகழுக்குரிய ஞானமிக்கவன் (அல்லாஹ்) இடமிருந்து இறங்கியுள்ளது. திருக்குர்ஆன் 41:42

சகலமும் உண்டு. ஆனால் உண்மைக்குப் புறம்பாக எதுவுமே இல்லை. இது தான் குர்ஆனின் சிறப்பு. எனவேதான் அதை யாராலும் அழிக்கவே முடியாது!

நாமே இவ்வேதத்தை (உமக்கு) அருளினோம். நாமே அதன் பாதுகாவலனாக உள்ளோம். திருக்குர்ஆன் 15:9

பொய்மை என்றால் விரைவிலேயே அழிந்துவிடும். ஆனால் உண்மை கசப்பாக இருந்தாலும் என்றும் அழியாது. அது நிலைத்தே நிற்கும். அனைத்தையும் வென்றே தீரும்.

முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைத்தூதரா?

முஹம்மத் தம்மை இறைத்தூதர் என்று பொய்யுரைத்துக் கொண்டாரோ! முஹம்மத் இறைத்தூதரா?!

இது மெய்யா? பொய்யா என்று. இப்போது உன் இதயத்தை ஐய முட்கள் பதம் பார்த்துக் கொண்டுள்ளன.

முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைத்தூதர் என்பதை இறைவேதம் குர்ஆன் மனித குலத்திற்குத் தெரிவிக்கிறது.

முஹம்மத்(ஸல்) அவர்கள் உங்கள் ஆடவர்களில் எவருக்கும் தந்தையாக இருக்கவில்லை. ஆனால், அவரோ அல்லாஹ்வின் தூதராகவும் இறைத் தூதர்களில் இறுதியானராகவும் இருக்கிறார்கள். திருக்குர்ஆன் 33:40

பிறந்த தினம் முதல் என்றுமே முஹம்மத்(ஸல்) அவர்கள் பொய் யுரைத்ததாகச் சரித்திரமே இல்லை. பிறருடைய பொருட்களின் மீது ஆசை வைத்ததே இல்லை. ஒருபோதும் யாருக்கும் தீங்கிழைத்ததே இல்லை. அரபு நாடு முழுவதிலும் உண்மையாளர், நம்பிக்கைக்குரியவர் என்பதைத் தவிர வேறு வார்த்தைகளில் யாரும் அவரை அழைத்ததே இல்லை. வாக்கு மீறியதுமில்லை. வம்புக்குப் போனதுமில்லை. நான் இறைத்தூதர் என்றதால் அம்மக்கள் கொடுத்தார்கள் தொல்லை கொட்டினார்கள் வழியில் முள்ளை அதற்கும் கோபம் கொண்ட தில்லை அடித்தார்கள் அவர்களின் மீது கல்லை அப்போதும் அவர்களை அழிக்க விரும்பவில்லை. நான்கில் எதுவோ நாற்பதிலும் அதுவே! ஆறில் எதுவோ அறுபதிலும் அதுவே! இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் வரலாற்றை நீ ஆயிரமாயிரம் முறை புரட்டினாலும் நீ காண்பதும் அதுவே. அப்படிப்பட்ட இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் பொய்யுரைப்பார்களா? அதுவும் நாற்பது ஆண்டுகளாகப் பொய்யுரைக்காமல் நாற்பத்தி ஒன்றாம் ஆண்டு பொய்யுரைக்கக்கூடுமா? அப்படி அவர்கள் அதுவரையில் பொய்யுரைக்காமல் அப்போது மட்டும் பொய்யுரைக்க வேண்டுமென்றால் ஒன்று அழகிய கன்னியர்களை அடைய வேண்டுமென்ற எண்ணம் இருக்கக்கூடும். இல்லையாயின் செல்வங்களைச் சேர்க்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கக்கூடும். அதுவுமில்லையாயின் நாட்டிற்குத் தாம் ஓர் அரசராக வரவேண்டுமென்ற எண்ணம் இருக்கக்கூடும். ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் இம்மூன்று ஆசைகளில் ஒன்று கூட அறவே இருந்ததில்லையே!

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர் ஹம்ஸ(ரலி) அவர்கள் பெரும் வீரர். அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அதன்பின்னர் குரைஷியர்களுக்கு பெரும் பயம் ஏற்பட்டு விட்டது. இனிமேல் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை மிரட்டியோ, அதட்டியோ எதையும் சாதிக்கமுடியாது என எண்ணிய அவர்கள் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரரான உத்பாவை இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களிடம் அனுப்பிச் சில ஆசை வார்த்தைகளைக் கூறி ஏகத்துவப் பிரச்சாரத்தைத் தடை செய்ய முயற்சித்தார்கள்.

உத்பா முஹம்மத்(ஸல்) அவர்களிடம் வந்து அமர்ந்து “என் அன்புச் சகோதரரின் புதல்வரே! தாங்கள் ஏன் எங்கள் மத்தியில் வெறுப்பூட்டும் அளவிற்கு நடந்து கொள்கிறீர்கள்? எங்கள் ஒற்றுமையைக் குலைத்து விட்டீர்களே? எங்கள் தெய்வங்களைக் குறை கூறுகிறீர்களே, எங்களில் திறமை வாய்ந்த சமூக அறிவாளிகளைப் புத்தியற்றவர்களாக்கி விட்டீர்களே, எனினும் சில நல்ல காரியங்களைச் செய்வீர்களென்ற நம்பிக்கையுடன் உம்மிடம் வந்துள்ளேன். அதை நான் கூறட்டுமா?“ எனக் கேட்டார்.

அதற்கு நபி(ஸல்) அவர்கள் “தாங்கள் கொண்டு வந்துள்ள செய்தி என்னவென்று கூறுங்கள்“ என்றார்கள்.

“முஹம்மதே! மக்களுக்கிடையில் நீங்கள் பிளவை ஏற்படுத்துவதால் யாதொரு பயனுமில்லை! நீங்கள் இந்த அரபு நாட்டிற்கே தலைவராக விரும்பினால் அதை இப்போதே கூறிவிடுங்கள். இந்நாட்டின் அனைத்து அதிகாரங்களையும் உங்கள் கையில் ஒப்படைத்து விடுகிறோம். அல்லது அழகிய மங்கையர்களின் மீது உங்களுக்கு ஆசை இருப்பின் அதையும் கூறிவிடுங்கள். அரபு நாட்டிலுள்ள அனைத்து அழகிய மங்கையர்களையும் உங்கள் காலடியில் பணியச் செய்கிறோம். அல்லது அரபு

நாட்டிலுள்ள செல்வச் சீமான்களையெல்லாம் விட பெரும் செல்வச் சீமானாக விளங்க விரும்புகிறீர்களென்றால் அதையும் கூறிவிடுங்கள். எங்களின் செல்வங்களனைத்தையும் தங்களின் முன்பாகக் கொட்டிவிடுகிறோம். ஆனால் தாங்கள் இப்பிரச்சாரத்தை நிறுத்திவிட வேண்டும்.“ என்று கூறினார்.

இதைக் கேட்ட இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் “எனது ஒரு கரத்தில் சந்திரனையும் மற்றொரு கரத்தில் கதிரவனையும் கொண்டு வந்து வைத்தாலும் நான் எனது ஏகத்துவக் கொள்கையை விடவே மாட்டேன்“ எனக்கூறி திருக்குர்ஆனில் இடம்பெறும் 41ஆம் அத்தியாயத்தில் உள்ள சில வசனங்களை ஓதிக்காண்பித்து விட்டு “உத்பாவே! நீர் எவ்வளவு கருத்து மிகுந்த, உண்மையான வார்த்தைகளைக் கேட்க வேண்டியதைக் கேட்டு விட்டீர். இனிமேலாவது நன்கு சிந்தித்துக் கொள்வீர் எனக் கருதுகிறேன்“ என்று கூறி முடித்தார்கள். இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களின் மறுமொழியையும், இறைவேத வசனங்களையும் கேட்ட உத்பா தோல்வியடைந்து தன் குலத்தார்களிடம் திரும்பிச் சென்று விட்டார்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள்தாம் இறைத்தூதர் என்று கூறுவது பொய்யாக இருந்தால் இவற்றை அடைவதற்காகத்தானே பொய் கூறுவார்கள். அவற்றில் எதுவுமே தேவையில்லை. ஓர் இறைக் கொள்கைதான் தேவை யென்றால் அவர்கள், தம்மை இறைத்தூதர் முஹம்மத் என்று கூறியது எவ்வாறு பொய்யாகும். சற்று எண்ணிப்பார் மனிதா!

உன்னிடம் இவை மூன்றையும் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, உன் பெற்றோரை, மனைவி, மக்களை எல்லோரையும் கொன்று விடு. அப்போதுதான் இம்மூன்றும் உனக்கு கிடைக்கும் என்று கூறிவிட்டால் நீ அவ்வாறே செய்து விடுவாயோ! ஆனால் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அப்பெரும் செல்வங்களுக்காக ஒரே வார்த்தை நான் ஏகத்துவப் பிரச்சாரத்தை நிறுத்திவிடுகிறேன் என்று கூறவும் தயாராக இல்லை என்றால் அவர்கள் இறைத்தூதர் என்பதற்கு இதைவிடப் பெரும் சான்று வேறு உமக்குத் தேவையா?

இறைத்தூதர் மக்காவில்தான் வரவேண்டுமா?

இறைவன் ஒருவன், அவன் யாதொரு இணையும் துணையுமற்றவன். நாம் கற்பனை செய்வது போன்ற உருவமற்றவன். அவனை யாரும் பெறவுமில்லை அவன் யாரையும் பெறவுமில்லை. அவனுடைய பார்வை எங்கும் உண்டு அவன் அனைத்துப் படைப்பினங்களின் மீதும் மிகச்சக்தி வாய்ந்தவன் என்றும் நிலையானவன் அவன்தான் இறைவன் அவன்தான் அல்லாஹ் இதுதான் ஏகத்துவம் இறைவனை அறிவுப்பூர்வமாக இப்படித்தான் உணரவேண்டும்.

இறைவனுக்குச் சமமாக மனிதர்களை ஆக்கிக்கொள்வது, உருவங்களை வடித்து வணங்குவது, பெரும் மூடத்தனம் மட்டுமின்றி குற்றமாகவும் உள்ளது. ஒரு மனிதன் செய்யும் பாவங்களில் இறை நாடினால் எதையும் மன்னிப்பான். ஆனால் அவனுக்கு இணையாக எதையும் ஆக்குவதை அவன் ஒருபோதும் மன்னிக்கமாட்டான்.

மனிதா! உன்னுடைய மனைவி அவளையும் அறியாமல் செய்யும் குற்றங்களை நீ மன்னித்துவிடுவாய் ஏன் அறிந்து கொண்டே செய்யும் குற்றங்களைக் கூட சில நேரங்களில் மன்னித்து விடுவாய். ஆனால் அவள் இன்னொருவனுடன் இல்லற சுகத்தை அடைந்தால் அதை மன்னிப்பாயா?

மௌனம் வேண்டாம், தெளிவாகச் சொல்!

மன்னிக்கவே மாட்டாயா?

ஆமாம் நீதான் மானமுள்ளவன், ரோஷமுள்ளவன். உனக்கு இவ்வளவு மானமும், ரோஷமும் வெளிப்படும்போது, உன்னைப் படைத்து பாதுகாத்து வரும் இறைவனுக்கு நீ மாறுசெய்து கல், மண், மரம், சமாதி, இறந்தவர்களின் சிலைகள், பாம்புகள், கால் நடைகள், விலங்குகள் போன்றவற்றை கடவுள் என்றும் கடவுளுக்குச் சமம் என்றும் நீ கருதினால் படைத்தவனுக்கு ரோஷம் வருமா, வராதா? அவன் உன்னை மன்னிப்பானா?

மனிதா! இஸ்லாத்தின் அடிப்படையே இறைவனுக்கு இணைகற்பிக் காது அவனைத் தூய்மையாக நினைப்பதுதான்.

மனிதா! உன் நினைவிலும் கடவுளுக்கு இணை கூடாது.

கனவிலும் கூடாது.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் அனுப்பப்படுவதற்கு முந்தைய அந்தக் காலகட்டத்தில் உலகில் மூடத்தனம் அதிகமாகிவிட்டன. அவற்றை ஒழிக்க வேண்டும். அவர்களுக்கு நேர்வழி கொடுக்க வேண்டும். மனித சமத்துவம் சிதைந்துவிட்டது. காரணமின்றி இரத்த நதிகள் ஓடிக் கொண்டிருந்தன. மனிதர்கள் தன் உடம்பிலிருந்து பிரித்து எடுக்கும் தன் தசைகளான பெண் குழந்தைகள் பிறந்து விட்டால் கொஞ்சமும் ஈவு இரக்கமின்றி உயிருடனே மண்ணுக்கு இரையாக்கிக் கொண்டிருந்தார்கள். எனவே அவர்கள் அனைவரையும் திருத்த வேண்டும். நியாயம், நீதி உலகில் அடியோடு அழிந்து போனது. அவற்றையெல்லாம் உயிர்ப்பிக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இறைவன் மனிதர்களிலே சிறந்த மனிதரைத் தேர்ந்தெடுத்து தன் தூதராக உலகிற்கு அனுப்பினான். அவர்தான் முஹம்மத் எனும் இறைத்தூதர் ஆவார்.

ஒன்றை நன்கு தெரிந்து கொள்!

தகுந்த காரணமின்றி இறைவன் எதையும் செய்வதுமில்லை எதையும் படைப்பதுமில்லை. அன்றையக் காலக் கட்டத்தில் முன் குறிப்பிட்டவை அனைத்தும் அரபு நாட்டிலும் மிகவும் அதிகமாகத் தலைவிரித்தாடின. மட்டுமின்றி மக்காவிற்கு அருகில் உக்காஸ் எனும் இடத்தில் வருடத்திற்கு ஒருமுறை உலகச் சந்தை நடப்பது வழக்கமாக இருந்தது. அச்சந்தைக்குச் சீனா, ஜாவா, சுமத்ரா, மலாயா, இந்தியா ஆகிய கீழை நாடுகளிலிருந்தும் சிரியா, எகிப்து, கிரீஸ், ரோம் ஆகிய மேலை நாடுகளிலிருந்தும் வரும் பெரும் வணிகர்கள் தங்களின் பொருட்களைக் கொண்டு சென்று விற்பது மட்டுமல்லாமல் தமக்குத் தேவையான மற்ற அனைத்துப பொருட் களையும் வாங்கி வருவார்கள். இந்தச் சந்தை இவ்வாறே பலநாட்கள் நடக்கும். தவிர அரபு நாடு உலகின் மத்தியில் உள்ளது. இங்கிருந்து தரை மார்க்கமாக ஐரோப்பாவுக்கும், ஆப்பிரிக்காவுக்கும் செல்லலாம்.

எனவே பன்னாட்டு மக்கள் ஒன்று சேர்வதால் ஏகத்துவக் கொள்கையை இங்கிருந்து எல்லா நாடுகளுக்கும் பரவச் செய்வது இலகுவாகும் என்ற அடிப்படையில் இறைவன் தன் இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை இங்கு அனுப்பி இருக்கலாம்.

இஸ்லாம் மீண்டும் நினைவூட்டப்பட்டது என்றால் என்னவென்றா கேட்கிறாய்?

நீ நினைப்பது போன்று இஸ்லாம் புதிய ஒரு மார்க்கமோ, இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் தோற்றி வைத்ததோ, அல்ல. ஆதி மனிதன் ஆதம்(அலை) பூமியில் வாழத் தொடங்கிய நாள் முதல் இறைவன் மனிதனுக்கு கொள்கை மற்றும் சட்டங்களை வழங்கினான். அந்தக் கொள்கையும், சட்டங்களும் இஸ்லாம் எனப்படும். மனித இனம் அமைதியாக வாழவேண்டும் என்பதால் அமைதிக்கு உத்திரவாதமுள்ள கொள்கை மற்றும் சட்டங்களை வழங்கினான். அந்தக் கொள்கையும், சட்டங்களும் இஸ்லாம் எனப்படும். மனித இனம் அமைதியாக வாழவேண்டும் என்பதால் அமைதிக்கு

உத்திரவாதமுள்ள கொள்கை மற்றும் சட்டங்கள் இஸ்லாத்தில் இடம் பெறுகின்றன. இஸ்லாம் என்பதற்கு அமைதி, பணிதல், கட்டுப்படுதல் என்று பொருளாகும். இதன் வழியில் வாழும் அனைவரும் முஸ்லிம் எனப்படுவார்கள். இதன் பொருள் அமைதியானவன், கட்டுப்படுபவன், இறைவனுக்கு மட்டும் பணிபவன் என்பதாகும்.

மனிதா! இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைவனின் இறுதித்தூதர்! அவர்கள் அரபகத்தில் அனுப்பப்பட்டார்கள். அவர்களின் மூலம் இஸ்லாம் மீண்டும் நினைவூட்டப்பட்டு, அகிலமெங்கும் வேர்விட்டு மனித குலத்திற்கு சீரியவழி காட்டிக் கொண்டிருக்கிறது.

மனிதா! இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் ஏன்

அரபு நாட்டில் அனுப்பப்பட்டார்கள்? மற்ற நாடுகளில் அனுப்பப்பட்டிருக்கலாம்தானே? என்பது மீண்டும் மீண்டும் உனது சந்தேகமாக உள்ளதா?

இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இந்தியாவிற்கு அனுப்பப் பட்டிருந்தால், ஏன் அவர் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டார்? என்ற ஒரு கேள்வி கேட்பாய்.

அவர் ரஷியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தால் அவர்கள் ஏன் ரஷியாவுக்கு அனுப்பட்டார்கள் என்ற மற்றொரு கேள்வியும் கேட்பாய்.

நீ கேள்விகள் கேட்பதில் கொஞ்சமும் குறைந்தவனில்லையே!

இறுதித்தூதரை இறைவன் எங்காவது ஓர் இடத்துக்கு அனுப்பியே ஆக வேண்டும். இறைத்தூதர் எங்கு அனுப்பப்பட்டிருந்தாலும் உன் கேள்விகள் தொடரத்தான் செய்யும்.

இருப்பினுங்கூட இறைவனின் இறுதித்தூதர் முஹம்மத் அரபகத்துக்கு ஏன் அனுப்பப்பட்டார் என்பது இன்னும் சற்று தெளிவாக ஆய்வு செய்யப்பட வேணடிய ஒன்று என்பதை ஏற்றுக் கொள்கிறேன்.

அன்றைய காலச் சூழலில் அரபு மக்களுக்கிடையில்தான் ஏராளமான தீமைகள் காணப்பட்டன. எனவே அவர்களை முதலில் சீர்செய்து, உலகிற்கு வழி காட்டிகளாய்த் திகழச் செய்யலாம் என்பதற்காக இறைவன் தன் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை அரபகத்துக்கு அனுப்பியிருக்கிறான் என்பது போன்ற சில காரணங்கள் சொல்லப் பட்டாலும் அதுவே முழுக் காரணமாக இருக்கமுடியாது. ஏனெனில் அரபு மக்கள் சீர்கெட்ட கலாச்சாரத்தில் வாழ்ந்த அதே காலகட்டத்தில் அந்த அரபு மக்களையும் விட இழிவான செயல்களையும் தீமைகளையும் அதிகமாகப் புரியும் சமுதாயம் பிற நாடுகளிலும் வசித்தது என்பதை வரலாறுகள் தெளிவாகக் கூறிக்கொண்டுள்ளன. ஏன் இந்திய மண்ணில் கூட அதையும்விட சீர் கெட்ட கலாச்சாரங்கள் இருந்தன இதை நீயும் அறிவாய். கணவன் இறந்துவிட்டால் அவன் எரியும் அதே சிதையில் மனைவியும் உடன்கட்டை ஏற வேண்டும் என்பது கட்டாயச் சட்டமாக இருந்தது. உறவினர்கள், ஊர்மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து அவள் நெருப்பில் விழுந்து துடிதுடித்து மாய்வதைப் பார்த்து, அதைப் புண்ணியம் என எண்ணி மகிழ்ந்துவந்தார்கள். இன்றும் கூட இந்தியாவில் சில இடங்களில் இது காணப்படுவதுண்டு.

இறைவனுடைய இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு முன்பு பல காலகட்டங்களில் இறைத் தூதர்கள் பலர் பல்வேறு மொழியினருக்கும், பல்வேறு நாட்டவர்களுக்கும் அனுப்பப்பட்டிருந்தார்கள். ஆனால் அவர்கள் அந்த இறைத்தூதர்களைப் பொய்ப்பித்தும், அவர்களால் கொண்டு வரப்பட்ட வேதங்களைப் புறக்கணித்தும், புனைந்தும் சேதப்படுத்தினர். எல்லா நாட்டினருக்கும் எல்லா மொழியினருக்கும் வழிகாட்டியாக அமைந்து, பல்வேறு கொள்கைகளைக் கடைப்பிடித்துச் சிந்தனைத் தடுமாற்றத்திலிருக்கும் மனித சமுதாயத்தை நேர்வழிப்படுத்தியாக வேண்டும்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட இறை வேதமும் இவ்வாறுதான் கூறிக் கொண்டிருக்கிறது.

“இது (திருகுர்ஆன்) உலக மக்கள் அனைவருக்கும் நல்லுபதேசமே அன்றி வேறில்லை.“ திருக்குர்ஆன் 68:52

சமயச்சார்புடையவர்களும் சமயச்சார்பற்றவர்களுமாகிய உலக மக்களை பொதுவாக ஏழு அணியினராகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. யூதக் கொள்கையுடைய அணியினர்.
2. கிருஸ்துவக் கொள்கை அணியினர்.
3. நெருப்பை வணங்கும் அணியினர்.
4. சூரியன், சந்திரன் போன்ற இயற்கையை வணங்கும் அணியினர்.
5. சிலைகளையும், மனிதர்களையும், அதாவது படைப்பினங்களை வணங்கும் அணியினர்.
6. படைத்த ஒரே இறைவனை மட்டும் வணங்கும் அணியினர்.
7. இறைவனே இல்லை! என்று இறைவனை மறுக்கும் அணியினர்.

இறைத்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்கள் இறைவனுடைய தூதராக அனுப்பப்பட்ட அன்றைய கால கட்டத்தில் மேற்குறிப்பிட்ட ஏழு அணியினரும் மொத்தமாக வாழ்ந்த ஒரே இடம் அரபகம் மட்டும்தான். எனவே இந்த ஏழுவகை மக்களின் சிந்தனைத் தடுமாற்றத்திற்கும் சரியான முறையில் விளக்கமளித்துத் தெளிவுபடுத்தினால், இஸ்லாமிய மார்க்கம் உலகெங்கும் பரந்து செல்வதற்கும், மக்கள் அதை ஏற்றுக் கொள்வதற்காக வாய்ப்பு இருக்க முடியும் என்ற அடிப்படையில் இறைவன் தன்னுடைய இறுதித்தூதரை அரபகத்திற்கு அனுப்பி இருக்கலாம்.

மனிதா! மற்ற தேசங்களுக்கு இறுதித்தூதர் அனுப்பப்பட்டிருந்தால் பிரச்சினைகள் அனைத்தும் தீர்வைக் கண்டிருக்கும் என்று உறுதிபடக் கூற முடியாது.

மனிதா! உனக்கு ஓர் உதாரணம் சொல்கிறேன்.

முஹம்மத்(ஸல்) அவர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டிருந்தால் இயற்கையையும், சிலைகளையும் மனிதர்களையும், மற்ற படைப்பினங் களையும் வணங்கிக் கொண்டிருக்கும் அணியினருக்கு மட்டுமே விளக்கமளித்திருக்க முடியும், தவிர அனைத்துக் கொள்கையுடைய மக்களுக்கும் தெளிவான விளக்கம் அளித்திருக்க முடியாது. ஏனெனில், இந்திய மக்கள் அந்த ஆறாம் நூற்றாண்டில் யூதர்களைப் பற்றித் துளியளவும் அறிந்திருக்கவில்லை. படைத்தவனை விட்டுவிட்டு, படைப்பினங்களை வணங்கக் கூடிய இந்திய மக்களின் சிந்தனைத் தடுமாற்றத்திற்கு மட்டுமே விளக்கம் அளித்திருக்க முடியும். உலகின் மற்ற இடங்களில் வாழ்ந்து கொண்டிருந்த யூதர்களைப் பற்றிய விளக்கம் எதுவும் கூறியிருக்க முடியாது. அப்படியே விளக்கம் கூறியிருந்தாலும் யூதர்களைப் பற்றி ஒன்றுமே புரியாத மக்களுக்கு பெரும் குழப்பம்தான் ஏற்படுமே தவிர தெளிவு ஏற்படாது. அது மட்டுமல்லாது இன்று கணிசமாக வாழும் யூதர்களுக்கு இறைச் செய்திகளும் எட்டி இருக்காது.

அவ்வாறே அந்த 6ம் நூற்றாண்டில் ஆஸ்திரேலியாவுக்கு இறுதித்தூதர் அனுப்பப்பட்டிருந்தால் அவர்களின் மூடப்பழக்கங்கள் மட்டுமே திருத்தத்திற்குள்ளாம் இருக்கும். கிருஸ்தவர்களின் வாடையைக் கூட அறியாதவர்களாக இருந்த அவர்களிடம் கிருஸ்தவக் கொள்கைகளையும், அது பற்றிய விளக்கங்களையும் கூறி இறைச்செய்தியைத் தெளிவு படுத்தியிருந்தால், அவர்களுக்கு எவ்விதப் பயனும் இல்லாது போயிருக்கும் அல்லது அப்படியே கிருஸ்தவர்களைப் பற்றி எதுவுமே கூறாது விட்டிருந்தால்

இன்றைய உலகில் பெருமளவு வாழும் கிருஸ்தவர்களுக்கு இறைச் செய்தி கிடைக்காமலே போயிருக்கும்.

மனிதா! இதை நீ சிந்தித்தாயா?

இறைச் செய்தி அகிலத்தார் அனைவருக்கும் பொதுவானது. குறிப்பிட்ட கொள்கை, மொழி, இனம், தேசம் என்ற அடிப்படையில் எவரும் அதைத் தனக்கு மட்டும் சொந்தமானதாக ஆக்கிக் கொள்ள முடியாது. எனவே தான் அனைத்துச் சிந்தனையுடைய மக்களும் ஒட்டுமொத்தமாக வாழ்ந்த அந்த அரபு நாட்டில் இறைவன் தன் இறுதித்தூதர் முஹம்மத்(ஸல்) அவர்களை அனுப்பியுள்ளான் என்ற முடிவிற்கு வருவதே பொருத்தமாகிறது.

வானவர்களே தூதர்களாக வந்தாலென்ன?

நீ வாழும் உலகில் எண்ணற்ற படைப்பினங்கள் உள்ளன. சில படைப்பினங்களை நீ நன்றாகப் பார்க்கிறாய். சில படைப்பினங்களை நீ பார்த்தாலும் உன்னால் அதைத் தொடமுடிவதில்லை.

ஆமாம், நான் வெளிச்சத்தைக் கூறுகிறேன்! சில படைப்பினங்களை நீ பார்க்கவும் முடியாது, தொடவும் முடியாது ஆனால் உன்னால் அதை உணர முடியும் ஆம். காற்றே தான். சில படைப்பினங்களை உன்னால் பார்க்கவும் முடியாது, தொடவும் முடியாது, உணரவும் முடியாது. உன்னுடைய அறிவுத்திரணைக் கொண்டு அறியத்தான் முடியும். அப்படிப்பட்ட படைப்பினங்களில் உள்ளவர்களில் வானவர்களும் அடங்குவார்கள். ஆமாம், இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் இறைவனை நேரடியாகப் பார்த்துப்பேசி திருக்குர்ஆனைப் போதிக்கவில்லை. வானவர்கள் என்று அழைக்கப்படும். இவர்களின் மூலமாகத்தான் இறைவன் தன்னுடைய கட்டளையும், உபதேசங்களையும் அனுப்பினான்.

வானவர்களையே இறைவன் தன்னுடைய தூதர்களாக மக்களிடம் அனுப்பினால் என்ன என்று கேட்கிறாயா?

உன்னுடைய இந்த ஐயத்தையும் அகற்றவேண்டும்தான்.

வானவர்களென்றால் அவர்கள் ஒளியால் படைக்கப்பட்டவர்கள், அவர்கள் உண்ணுவதுமில்லை உறங்குவதுமில்லை பருகுவதுமில்லை அவர்களுக்கு மனைவி மக்களென்ற பிரச்சினையுமில்லை. அவர்கள் அனைவரும் இறைவனைத் துதிப்பதைத் தவிர வேறொன்றைச் செய்வதுமில்லை. அப்படிப்பட்டவர்கள் உன்னிடம் வந்து, மனிதா! நீ இப்படித்தான் வாழ வேண்டும் எனச் செய்து காட்டினால் நீ அவர்களை நோக்கி என்ன கூறுவாய்?

வானவர்களே! நீங்கள் இறைவனின் கட்டளைப்படி நடப்பதில் உங்களுக்கு எவ்விதச் சங்கடமுமில்லை. ஏனெனில் உங்களுக்கு உலகில் எவ்வித வேலையுமில்லை. ஆனால் நாங்களோ எங்களின் வயிற்றையும், மனைவி மக்களையும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. எனவே அது எங்களுக்குச் சாத்தியமாகாது. அதை நீங்கள் மட்டும் செய்து கொள்ளுங்கள் என்றல்லவா கூறுவாய்! எனவே தான் இறைவன் மனிதர்களிலே ஒருவரைத் தேர்ந்தெடுத்து தாமும் செய்து காட்டி பிறருக்கும் கற்பிக்குமாறு இறைத்தூதரை அனுப்பியுள்ளான்.

இப்படிப்பட்ட நற்சிந்தனைகள் ஏன் உன் நெஞ்சில் எழுவதில்லை?

வழி தவறி விடாதே!

மனிதா! நீ மனிதனாகவே மதிக்கப்பட வேண்டும். நீ மட்டுமின்றி உன் சாரார் அனைவருமே மதிப்படைய வேண்டும். எறும்பு போன்று கூடி கரும்பாய் இனித்து சமத்துவமெனும் கொடியை உலகமெங்கும் பறக்க விடவேண்டும். அறிவிலிகள் அறிவாளிகளாக மாறவேண்டும்.

என் தலையின் காவலன் மீது ஆணை! உலகில் எப்படிப்பட்ட இயக்கங்களில் நீ மட்டுமல்ல, உலகமே பங்கு கொண்டு செயல் பட்டாலும், அதற்காக உயிரையும் தியாகம் செய்தாலும் இஸ்லாமிய மார்க்கம் வலியுறுத்துபவற்றை நிலை நிறுத்தினாலே அன்றி மனித குலத்திற்கான முழுமையான தீர்வைக் காணமுடியாது.

எனவே, மனிதா! இஸ்லாமிய வழியில் வந்து விடு! அதன்படியே செயலாற்றிடு. தீயோரின் மாயவலையில் விழுந்து விடாதே! உன்னை நீயே அழித்துக் கொள்ளாதே!

உண்மையே வெல்லும்...

முட்டையின் வெள்ளைக்கருவும் மஞ்சள் கருவும் பார்ப்பதற்குப் பெரிதாக உள்ளன. ஆனால் அவை இரண்டும் மெய்யானதுமல்ல, பலம் வாய்ந்ததுமல்ல. உண்மையில் பலம் வாய்ந்தது குண்டூசியின் தலையளவில் முட்டையின் நடுவிலுள்ள உயிரணுதான். நாளடைவில் அந்த உயிரணுவானது வெள்ளை, மஞ்சள் போன்ற சக்தியற்ற கருவான இரண்டையும் தன்னுள்ளாக்கிச் சிறுகச் சிறுகப் பெரிதாகி முழுமையாகி தடைகளை உடைத்துக் கொண்டு உயிர்பெற்று எழுகிறது. இன்றுள்ள மதங்களின் உதாரணமும் அது போன்றதுதான்.

உலகிலுள்ள மதங்களில் சில மதங்கள் வெள்ளைக் கருவைப் போன்றும் சில மதங்கள் மஞ்சள் கருவைப் போன்று உள்ளன. இஸ்லாம் ஒன்றுதான் உயிரணு, மெய்யானது, பலம் வாய்ந்தது. எவ்வாறு உயிரணு நாளுக்கு நாள் பெரிதாகிக் கொண்டே செல்கிறதோ அதேபோன்று இஸ்லாம் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே இருக்கிறது. மற்ற இயக்கங்கள் எவ்வளவு பெரிதாக இருந்தாலும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகின்றன. எவ்வாறு முட்டையின் உயிரணு வெள்ளை மஞ்சள் கருக்கள் அனைத்தையும் தன்னுள் ஆக்கித் தடைகளை உடைத்து ஒருநாள் முழுமை பெற்று நிற்கிறதோ அதே போன்ற மெய்யான மார்க்கம் இறைவனின் பலம் பெற்ற மார்க்கம், மனிதர்களைச் சீரான வழிநடத்தும் மார்க்கம். சிறுகச்சிறுக பெரிதாகித் தடைகள் அனைத்தையும் உடைத்து வென்றே தீரும். இறைவனின் வாக்கும் இவ்வாறுதான் உள்ளது.

நிச்சயமாக சத்தியம் வெல்லும், அசத்தியம் அழியும். நிச்சயமாக அசத்தியம் ஒரு நாள் அழிந்து போகக்கூடியதே! என்று (இறைத்தூதர் முஹம்மதே) நீர் கூறும்! திருக்குர்ஆன் 17:8

மனிதா! உன் நேர்வழிக்கும், வெற்றிக்கும் என் பிரார்த்தனைகள்